1984 மார்ச் 22]

நெற் பயிருக்குச் சொட்டு நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சி.

393—(வினா எண். 20650)—* திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெற்பயிருக்குச் சொட்டு நீர்பாசன முறையைப் பயன் படுத்த ஆராய்ச்சி நடந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : *(அ)* மற்றும் *(ஆ).* இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, விவசாயத்திலே பயிர்களுக்கு '' சொட்டு நீர்பாசன '' முறையை பயன்படுத்தினால் அதிகமான மகசூல் கிடைக்கிறது என்று அதிலே சம்பந்தப்பட்ட, அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் சொல்லுகிறார்கள், அதை அரசாங்கம் பரீட்சார்த்த மாகக்கூட சில இடங்களில் நடத்தியதாக எனக்குத் தகவல் சொன் னார்கள். எனவே அதைப் பரவலாக நடத்துவதற்கு அரசாங்கத் திடம் குறிப்புகள் ஏதாவது உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இந்தப் பாசன முறைகளை நாம் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த இருக்கிறோம். இதில் தென்னை, மா, காய்கறிகள் போன்றவைகளுக்கு இந்த முறை பயன்படுத்தப்படும். நெல்லைப் பொறுத்தவரையிலே, அதற்கு தகுந்த இடைவெளிவிட்டு நடுகின்றபோது அதிலே தண்ணீர் தேங்கி நிற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் இந்தப் பாசன முறை அதற்குப் பயன்படுத்த முடியாது. ஆகவே மற்ற வைகளுக்குத்தான் இதைப் பயன்படுத்த அரசு முடிவு செய்திருக் கிறது. இதிலே முன்னோடித் திட்டமாக, ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே மூன்று வகையான பயிர்களைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மணிலாவுக்கும் அதைப் பயன்படுத்தலாம். அதேபோல கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற புன்செய் தானியங்களுக்கும் கூட அதைப் பயன்படுத் திக் கொள்வதனால் தண்ணீரும் சிக்கனமாகும். செலவு கூட குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி விவசாயிகள் அந்த

முறையைப் பயன்படுத்துவதற்கும், பயன்படுத்துகின்ற விவசாயி களுக்கு ஏதாவது சலுகைகளை அளிப்பதற்கும் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, அந்த வகைகளிலே அரசு ஆராயும். ஆனால் குறைந்த இடைவெளியில் இருக்கிற பயிர்களுக்கு அதைப் பயன்படுத்து வது என்பது மிக மிக அதிகமாக செலவு ஆகும். தென்னையைப் பொறுத்தவரையில் ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும் என்று சொல்லப்படுகிறது. காய்கறிகளுக்கு 7 ஆயிரம், 8 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தசெலவுத் தொகை, அதிலே வரக்கூடிய ஆதாயம் இவைகளை யெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான், இந்த திட்டத் தைச் செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டு நீர்ப்பாசனம், தண்ணீரை மிகச சிக்கனமாக பயன்படுத்துவதற்கு பிரயோஜனப்படுவதாகச் சொல் லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஏக்கருக்கு 3 ஆயிரம் வரையில் மானியம் வழங்கப்படுவதாகச் சொன் னார்கள். அதற்குத் தகுதி எந்த அடிப்படையில் நிர்ணயிக் கிறார்கள்? சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று ஏதாவது உள்ளதா? ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் என்று சொன்னால், கூடுத லாக எத்தனை ஏக்கர்கள் வரை இந்த மானியம் அளிக்கப் படும்? எந்தத் துறையின் மூலம் பெறவேண்டும் என்ற விவரங் களை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மூலமாகத்தான் அத்தகைய முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மை பொறியியல் துறைதான் அதன் செயல்பாட்டிற்கான பொறுப்பை ஏற் றிருக்கிறது. இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அது பற்றி விரிவாகப் பரிசீலனை செய்து முடிவுகள் அவ்வப்போது எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் பாசன நிலங்களில் பற்றாக்குறை ஏற்பட்டிருக் கிறது. நம்மிடம் மீதம் இருப்பது கடல் மட்டும் தான். வங்கக் கடலில் ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் வற்றாத கடல் தண்ணீர் இருக்கிறது. எனவே கடல் தண்ணீரைப் பயன் படுத்தி, கடலுக்குள்ளேயே பாசி போன்ற வகையில் நெல் பயிர் ரகங்களை விளைவிக்க ஆராய்ச்சிகளை அரசாங்கம் மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, அதைப்பற்றிய விரிவான திட்டத்தை உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தயாரித்துக் கொடுத்தால் அரசு ஆராயும்.